# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KALLAKURICHI

CC.339/2017

Preliminary Register :
Sessions :
Deposition of witness for — Prosecution PW - 1 / Defence / Court

Name : ரகமத்பீ
Fathers Name : நூரலீ
Taluk : திருக்கோவிலூர்.
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the day of 06.01.2021.

முதல் விசாரணை

நான் திருக்கோவிலூரில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு திருக்கோவிலூர் பள்ளி வாசலில் ஆஜர் எதிரி முகமது யாசிப் என்பவர் திருக்கோவிலூர் பள்ளி வாசலுக்கு வந்து பிட் நோட்டீஸ் கொடுத்தார். அதில் ஹச்சிக்கு அழைத்து செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என விளம்பரம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த பிட் நோட்டீஸில் இருந்த நம்பருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். தொடர்பு கொண்ட போது ஒரு நபருக்கு ரூ. 55,000/- செலவில் தங்குவதற்கு இடம், உணவு, சாப்பாடு, போக்குவரத்து செலவு அனைத்தும் அதில் அடங்கும் என்று கூறினார். நான் 26.10.2014ம் தேதி கள்ளக்குறிச்சி பஸ் ஸ்டான்ட் அருகே கச்சிராயபாளையம் ரோட்டில் எதிரியினுடைய அலுவகத்திற்கு சென்றேன். அந்த அலுவலகம் சென்று எதிரி முகமது யாசிப் மற்றும் அவரது மனைவி மும்தாஸ்-ஐ பார்த்து பயான் செல்வதற்கான விபரத்தை கேட்டறிந்தேன். பயான் குறித்து கேட்டபோது ஒரு நபருக்கு தலா ரூ.55,000/- கட்டச்சொன்னார்கள். பிறகு எதிரி முகமது யாசிப் எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பயான் இருப்பதாகவும் பணம் எடுத்துக்கொண்டு கள்ளக்குறிச்சி அலுவலகம் வருமாறு தெரிவித்தார்கள். என் நகையை அடகு வைத்து பணத்தை தயார் செய்து, பின் 26.10.2014ம் தேதி ரூ.1,65,000/- பணத்தை எதிரி முகமது யாசிப்பின் அலுவலகத்தில் முகமது யாசிப்பிடம் கொடுத்தேன். அப்போது அவரது மனைவி மும்தாஸ் உடன் இருந்தார். பணம் செலுத்தியபிறகு இரண்டு மாதங்களாக அழைத்து செல்வதாக கூறிக்கொண்டிருந்தார்கள். அதன்பிறகு நான் முகமது யாசிப்பிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எப்போது என்னையும், மாமியார் பியாரி மற்றும் எனது மகன் சாதிக் பாஷாவை ஹச்சிக்கு அழைத்து செல்கிறீர் என்று கேட்டபோது பொறுங்கள் நான் அழைத்து செல்கிறேன் என்று தெரிவித்தார். பின்பு மீண்டும் எதிரி முகமது யாசிப்பை தொடர்பு கொண்டபோது எனக்கு உடல்நிலை சரியில்லை என்று தெரிவித்தார். பின் 2016ம் ஆண்டு டிசம்பர் மாதம் எங்களை ஹச்சிக்கு அழைத்து செல்வதாக கூறி எங்களை சென்னை விமான நிலையத்திற்கு வரச்சொன்னார். நான், எனது மாமியார் பியாரி மற்றும் எனது மகன் சாதிக் பாஷா மூவரும் சென்னை விமான நிலையம் சென்றோம். நான் எதிரி முகமது யாசிப்பை விமான நிலையத்தில் சுமார் இரவு 08.00 மணி அளவில் எங்களை சந்தித்தார். எதிரி முகமதி யாசிப், அவரது மனைவி மும்தாஸ் மற்றும் அவரது மகன் முகமதி ரியாஸ் மூவரும் விமான நிலையம் வந்தார்கள். பின் எதிரி முகமது யாசிப் டிக்கெட் எடுத்து வருவதாக கூறிவிட்டு எங்களை காத்திருக்குமாறு கூறி சென்றுவிட்டார். பின்பு நள்ளிரவு சுமார் 01.00 மணி வரை விமான நிலையத்தில் காத்திருந்தோம். பயனச்சீட்டு

எடுத்துவருவதாக கூறிச் சென்ற முகமது யாசின் வரவில்லை. பின்பு நாங்கள் மீண்டும் கிளம்பி திருக்கோவிலூர் வந்துவிட்டோம். பின்பு திருக்கோவிலூர் வந்த பிறகு பணத்தை திரும்ப தருமாறு தொலைபேசியில் தொடர்பு கொண்டு முகமது யாசினிடம் கேட்டபோது தரமுடியாது என்று தெரிவித்துவிட்டார். பின்பு நான் கள்ளக்குறிச்சி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். நான் கொடுத்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

The counsel on record Mr. N.Shanmugam representing the accused was not present in court. Opportunity cross the present witness was not availed. Hence the cross of the present witness is closed.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KALLAKURICHI

CC.339/2017

Preliminary Register :
Sessions :
Deposition of witness for Prosecution PW - 2
Defence
Court

Name : பியாரிஜான்
Husbands Name : கபூர்
Taluk : திருக்கோவிலூர்.
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the day of 06.01.2021.

முதல் விசாரணை

நான் திருக்கோவிலூரில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மருமகள். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு திருக்கோவிலூர் பள்ளி வாசலில் ஆஜர் எதிரி முகமது யாசிப் என்பவர் திருக்கோவிலூர் பள்ளி வாசலுக்கு வந்து பிட் நோட்டீஸ் கொடுத்தார். அதில் ஹச்சிக்கு அழைத்து செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என விளம்பரம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த பிட் நோட்டீஸில் இருந்த நம்பருக்கு அ.சா.1 தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். தொடர்பு கொண்ட போது ஒரு நபருக்கு ரூ. 55,000/- செலவில் தங்குவதற்கு இடம், உணவு, சாப்பாடு, போக்குவரத்து செலவு அனைத்தும் அதில் அடங்கும் என்று கூறினார். நான் மற்றும் அ.சா.1 26.10.2014ம் தேதி கள்ளக்குறிச்சி பஸ் ஸ்டான்ட் அருகே கச்சிராயபாளையம் ரோட்டில் எதிரியினுடைய அலுவகத்திற்கு சென்றேன். அந்த அலுவலகம் சென்று எதிரி முகமது யாசிப் மற்றும் அவரது மனைவி மும்தாஸ்-ஐ பார்த்து பயான் செல்வதற்கான விபரத்தை கேட்டறிந்தோம். பயான் குறித்து கேட்டபோது ஒரு நபருக்கு தலா ரூ.55,000/- கட்டச்சொன்னார்கள். பிறகு எதிரி முகமது யாசிப் அ.சா1க்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பயான் இருப்பதாகவும் பணம் எடுத்துக்கொண்டு கள்ளக்குறிச்சி அலுவலகம் வருமாறு தெரிவித்தார்கள். அ.சா.1ன் நகையை அடகு வைத்து பணத்தை தயார் செய்து, பின் 26.10.2014ம் தேதி ரூ.1,65,000/- பணத்தை எதிரி முகமது யாசிப்பின் அலுவலகத்தில் முகமது யாசிப்பிடம் கொடுத்தோம். அப்போது அவரது மனைவி மும்தாஸ் உடன் இருந்தார். பணம் செலுத்தியபிறகு இரண்டு மாதங்களாக அழைத்து செல்வதாக கூறிக்கொண்டிருந்தார்கள். அதன்பிறகு அ.சா.1 முகமது யாசிப்பிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எப்போது என்னையும், எனது மருமகள் அ.சா.1 மற்றும் எனது பேரன் சாதிக் பாஷாவை ஹச்சிக்கு அழைத்து செல்கிறீர் என்று கேட்டபோது பொறுங்கள் நான் அழைத்து செல்கிறேன் என்று தெரிவித்தார். பின்பு மீண்டும் எதிரி முகமது யாசிப்பை தொடர்பு கொண்டபோது எனக்கு உடல்நிலை சரியில்லை என்று தெரிவித்தார். பின் 2016ம் ஆண்டு டிசம்பர் மாதம் எங்களை ஹச்சிக்கு அழைத்து செல்வதாக கூறி எங்களை சென்னை விமான நிலையத்திற்கு வரச்சொன்னார். நான், எனது மருமகள் அ.சா.1 மற்றும் எனது பேரன் சாதிக் பாஷா மூவரும் சென்னை விமான நிலையம் சென்றோம். நான் எதிரி முகமது யாசிப்பை விமான நிலையத்தில் சுமார் இரவு 08.00 மணி அளவில் எங்களை சந்தித்தார். எதிரி முகமதி யாசிப், அவரது மனைவி மும்தாஸ் மற்றும் அவரது மகன் முகமதி ரியாஸ் மூவரும் விமான நிலையம் வந்தார்கள். பின் எதிரி முகமது யாசிப் டிக்கெட் எடுத்து வருவதாக கூறிவிட்டு

எங்களை காத்திருக்குமாறு கூறி சென்றுவிட்டார். பின்பு நள்ளிரவு சுமார் 01.00 மணி வரை விமான நிலையத்தில் காத்திருந்தோம். பயனச்சீட்டு எடுத்துவருவதாக கூறிச் சென்ற முகமது யாசின் வரவில்லை. பின்பு நாங்கள் மீண்டும் கிளம்பி திருக்கோவிலூர் வந்துவிட்டோம். பின்பு திருக்கோவிலூர் வந்த பிறகு பணத்தை திரும்ப தருமாறு தொலைபேசியில் தொடர்பு கொண்டு முகமது யாசினிடம் கேட்டபோது தரமுடியாது என்று தெரிவித்துவிட்டார். பின்பு அ.சா.1 கள்ளக்குறிச்சி காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

The counsel on record Mr. N.Shanmugam representing the accused was not present in court. Opportunity cross the present witness was not availed. Hence the cross of the present witness is closed.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KALLAKURICHI

CC.339/2017

Preliminary Register :
Sessions :
Deposition of witness for Prosecution PW - 3
Defence
Court

Name : சாதிக் பாஷா
Fathers Name : நூரலி
Taluk : திருக்கோவிலூர்.
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the day of 06.01.2021.

முதல் விசாரணை

நான் திருக்கோவிலூரில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தாயார். அ.சா.2 எனது பாட்டி. ஆஜர் எதிரிகளைத் தெரியும். நான் பள்ளிவாசலில் தொழுக போகும்போது நோட்டீஸை பார்த்து எதிரி முகமது யாசிப்பை தொடர்பு கொண்டோம். எதிரி மாஸ் உமரா & ஹச் சர்வீர் நடத்துவதாக தெரிவித்தார். அந்த அலுவலகம் கள்ளக்குறிச்சி, கச்சிராயபாளையம் ரோட்டில் உள்ளது. கடந்த 26.10.2016ம் தேதி நேரில் சென்று பேசி, பின் ரூ.5000/- பணத்தை எதிரி முகமது யாசினிடம் நான், அ.சா.1 மற்றும் அ.சா.2 உமரா செல்வதற்காக முன்பணமாக கொடுத்தோம். அதன்பிறகு சுமார் 2 மாதங்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பயிற்சிக்காக எதிரி முகமது யாசினின் கள்ளக்குறிச்சி கச்சிராயபாளையம் ரோட்டிலுள்ள அலுவலகத்திற்கு வரச்சொன்னார். எதிரி முகமது யாசின் எங்களை தொடர்பு கொண்டு உமரா செல்ல பணம் செலுத்த சொல்லி அதனடிப்படையில் நாங்கள் அ.சா.1 மற்றும் என் தங்கையின் நகையை அடகு வைத்து பணம் தயார் செய்தோம். நாங்கள் தயார் செய்த பணத்தை நான், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் சென்று எதிரி முகமது யாசினிடம் அவர் அலுவலகத்தில் கொடுத்தோம். அந்த பணத்தை மூன்று தவணையாக கொடுத்தோம் முதல் தவணை நாங்கள் செலுத்திய அட்வான்ஸ், இரண்டாவது தவணை 13.11.2016ம் தேதி கொடுத்தோம். மூன்றாவது தவணை 21.11.2016ம் தேதி கொடுத்தோம். மூன்று தவனைகளுமே எதிரி முகமது யாசினிடம் அவர் அலுவலகத்தில்தான் கொடுத்தோம். கடந்த 09.12.2016ம் தேதி ஹச் அழைத்து செல்வதாக தேதியை குறிப்பிட்டுச் சொன்னார். 08.12.2016ம் தேதி இரவு சுமார் 6 மணி அளவில் எங்களது வீட்டிற்கு வந்து எதிரி முகமது யாசின் 8 மணி வரை பயான் செய்ய சொன்னார். பிறகு எங்களை அதிகாலை கிளம்பி இருக்குமாறு சொன்னார். நாங்கள் 9.12.2016ம் தேதி கிளம்பி இருந்தபோது எதிரி மும்தாஸ் அ.சா.1னிடம் தொலைபேசியின் தொடர்பு கொண்டு எதிரி முகமது யாசினுக்கு உடல்நிலை சரியில்லை என்றும், அவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளதாகவும் அதனால் உமரா அழைத்து செல்ல முடியாது என்று தெரிவித்தார். நாங்கள் மருத்துவமனை சென்று பார்த்தபோது எதிரி முகமது யாசின் தரையில் படுத்திருந்தார். உடல்நிலை சரியில்லாததுபோல் நடித்தார். பின் உமரா அழைத்து செல்வது சம்பந்தமாக எதிரி முகமது யாசின் மீது கள்ளக்குறிச்சி ஜமாத்தில் வைத்து பிரச்சனை பேசப்பட்டது. அங்கு அவர் ஜமாத்தில் வைத்து எங்களை உமரா அழைத்து செல்வதாக தெரிவித்தார். சொன்னபடி உமரா அழைத்து செல்லாததால் மீண்டும் திருக்கோவிலூர் தமிழக முஸ்லிம் முன்னேற்ற கழகத்தில் வைத்து பஞ்சாயத்து பேசப்பட்டது. திருக்கோவிலூர் பஞ்சாயத்தில் பின்பு 2017ம் வருடம் 2வது மாதம் உமரா அழைத்து செல்வதாக

பிரச்சனை பஞ்சாயத்து செய்யப்பட்டது. எதிரி முகமது யாசின் பஞ்சாயத்தில் சொன்னபடி உமரா அழைத்து செல்லாததால் கள்ளக்குறிச்சி காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. காவல்நிலையத்தில் மீண்டும் பஞ்சாயத்து பேசப்பட்டு 24.02.2017ல் மீண்டும் உமரா அழைத்து செல்வதாக தெரிவித்து எங்களை சென்னை விமான நிலையத்திற்கு வரச்சொன்னார். 24.02.2017ம் தேதி அன்று நாங்கள் சென்னை விமான நிலையம் நான் என் அம்மா அ.சா1 பாட்டி அ.சா.2 சென்றோம். அங்கு எங்களை சந்தித்த எதிரி முகமது யாசின் மின்னஞ்சலில் பயணச்சீட்டு உள்ளதாகவும், அதை பிரிண்ட் செய்துவிட்டு வருவதாகவும் சொல்லிச்சென்றார். பின்பு இரவு ஒரு மணி வரை விமான நிலையத்தில் காத்திருந்தோம். எதிரி முகமது யாசின் வரவில்லை. பின்பு 25.02.2017ம் தேதி மீனம்பாக்கம் காவல்நிலையத்தில் எதிரி முகமது யாசின் மீது புகார் அளித்தோம். எதிரி முகமது யாசின எங்களை தொடர்பு கொண்டு பணத்தை மீண்டும் திருப்பி கொடுப்பதாக தெரிவித்தார். அவர் சொன்னதை நம்பி பணத்தை கேட்டபோது அசிங்கமாக திட்டினார். ஆட்களை வைத்து எங்களை அடித்து விடுவதாக மிரட்டினார். இச்சம்பவம் சம்மந்தமாக கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

The counsel on record Mr. N.Shanmugam representing the accused was not present in court. Opportunity cross the present witness was not availed. Hence the cross of the present witness is closed.